بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/12/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪ உஹுது போருக்காக புறப்பட்ட போது எதிர்கொண்ட சம்பவங்களைப் பற்றிய குறிப்பு**

**✪ பாலஸ்தீனத்து அப்பாவிகளுக்காக துஆக்களுக்கான தொடர் வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் உஹுது போர் தொடர்பாக கூறப்பட்டு வந்தது. இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறியுள்ளதை சுருக்கமாக நான் எடுத்துரைக்கிறேன். அன்னார் கூறுகிறார்கள்: காஃபிர்களுடைய படை பத்ர் போருக்குப் பிறகு பத்ர் மைதானத்தை விட்டு ஓடும் போது, அடுத்த வருடம் நாங்கள் மதீனா மீது மீண்டும் தாக்குதல் தொடுப்போம்; எங்களது தோல்விக்கு முஸ்லிம்களைப் பழிவாங்குவோம் என்று அறிவித்தார்கள். ஆகவே ஒரு வருடத்திற்குப் பிறகு அவர்கள் முழு ஆயத்தம் மேற்கொண்டு மதீனா மீது தாக்குதல் நடத்தினார்கள். மக்காவாசிகளின் கோபத்தின் நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், எந்த ஒரு நபரும் தம் மரணித்தவருக்காக அழுவதற்கு அனுமதி இல்லை என்றும், வியாபாரக் குழு மூலமாக வரும் வருமானம் அடுத்த போருக்காகப் பாதுகாக்கப்படும் என்றும் பத்ர் போருக்குப் பிறகு அவர்கள் அறிவித்து விட்டார்கள். ஆகவே பெரும் ஆயத்தம் மேற்கொண்ட பிறகு 3000 ஐயும் விட அதிக படை வீரர்களைக் கொண்ட ஒரு படை அபூ சுஃப்யான் அவர்களின் தலைமையில் மதீனா மீது தாக்குதல் தொடுத்தது.

நாம் நகருக்குள் இருந்து கொண்டு போரிட வேண்டுமா, இல்லை வெளியே சென்று போரிட வேண்டுமா என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் ஆலோசனை கேட்டார்கள். எதிரியைத் தாக்குதல் நடத்த விட வேண்டும்; அதன் மூலமாக போரைத் துவக்கிய பொறுப்பு அவர்களைச் சேர வேண்டும்; முஸ்லிம்கள் தம் வீடுகளில் இருந்து கொண்டு எளிதாக அதை எதிர்கொள்ள வேண்டும் என்றே பெருமானார் (ஸல்) அவர்கள் கருதினார்கள். ஆனால் பத்ர் போரில் கலந்து கொள்ளாத முஸ்லிம் இளைஞர்களின் உள்ளங்களில் இறைவழியில் ஷஹீதாக வேண்டும் என்ற ஏக்கம் இருந்தது. (ஆகவே) மதீனாவுக்கு வெளியே சென்று போரிட வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். இச்சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள்

தமது ஒரு கனவையும் கூறினார்கள். அக்கனவில் பெருமானார் (ஸல்) அவர்கள் சில பசு மாடுகளைக் கண்டார்கள். அவை அறுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அதேபோன்று அன்னாருடைய வாளின் முனை உடைந்து விட்டதாகவும் கண்டார்கள். தம் கையை ஒரு பாதுகாப்பான, உறுதியான கவசத்துக்குள் இடுவதாகவும் கண்டார்கள். அதேபோன்று, ஒரு செம்மறியாட்டு கிடாவின் மீது பயணிப்பதாகவும் கண்டார்கள். சஹாபிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் கண்ட காட்சிகளுக்கு விளக்கமளித்தவாறு கூறினார்கள்: 'பசு மாடுகள் அறுக்கப்படுவதன் பொருள், எனது சில சஹாபிகள் இந்தப் போரில் ஷஹீது ஆவார்கள் என்பதாகும். வாளின் முனை உடைவதன் பொருள், எனது அன்பர்களில் முக்கியமானவர் எவரேனும் ஷஹீதாகலாம் அல்லது இந்தப் போரில் ஒருவேளை எனக்கே ஏதேனும் துன்பம் நேரலாம் என்பதாகும். கவசத்துக்குள் கையிடுவது என்பதன் பொருள், மதீனாவில் நாம் இருப்பது மிகவும் பொருத்தமானதாகத் தெரிகிறது. செம்மறியாட்டு கிடாவின் மீது சவாரி செய்வதன் பொருள், காஃபிர்களுடைய படைத்தளபதியின் மீது நாம் ஆதிக்கம் பெற்று விடுவோம் என்பதாகத் தெரிகிறது.'

முஸ்லிம்கள் மதீனாவில் இருப்பது மிகவும் நல்லது என்று இந்தக் கனவின் மூலம் தெளிவாக்கப்பட்டு விட்டது. ஆனால் கனவின் விளக்கம் பெருமானார் (ஸல்) அவர்களின் சொந்த விளக்கமாக இருந்தது; இறை அறிவிப்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட விளக்கமல்ல. (ஆகவே) பெருமானார் (ஸல்) அவர்கள் பெரும்பாலானவர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டு போருக்காக வெளியே செல்லலாம் எனத் தீர்மானம் எடுத்தார்கள்.

வெளியே சென்று போர் செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஆயத்தமாகும்படி ஸஹாபிகளுக்குக் கட்டளையிட்டார்கள். அத்துடன் தாமும் போருக்காக ஆயத்தமானார்கள். அப்போது ஹஸ்ரத் சஅது பின் முஆஸ் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உசைது பின் ஹுஸைர் (ரலி) அவர்களும் மக்களைப் பார்த்து, வெளியே சென்று போரிடலாம் என்று கூறி பெருமானார் (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கெதிராக நீங்கள் அன்னாரைக் கட்டாயப்படுத்தி விட்டீர்கள். ஆகவே, இப்பொழுது கூட (நேரம் உள்ளது;) இந்த முடிவை அன்னாரிடம் விட்டு விடுங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ அதில்தான் நமது நன்மை இருக்கும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் (வீட்டை விட்டு) வெளியே வந்த போது போருக்கான உடையை அணிந்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் மக்கள் தம் கருத்தை எடுத்து வைத்த போது அன்னார் கூறினார்கள்: 'நபி ஆயுதம் ஏந்திய பிறகு, அவருக்கும் எதிரிகளுக்கும் இடையில் அல்லாஹ் தீர்ப்பு வழங்காதவரை ஆயுதங்களைக் கீழே வைப்பது நபிக்கு ஆகுமானதல்ல.'

பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுடன் புறப்பட்டபோது மூன்று ஈட்டிகளைக் கொண்டு வரச் செய்து அவற்றில் மூன்று கொடிகளைக் கட்டினார்கள். அவ்ஸ் கோத்திரத்தின் கொடியை ஹஸ்ரத் உஸைத் பின் ஹுஸைர் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். கஸ்ரஜ் கோத்திரத்தின் கொடியை ஹஸ்ரத் ஹப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள்.

முஹாஜிர்களின் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். மதீனாவில் எஞ்சியிருந்த மக்களுக்குத் தொழ வைப்பதற்காக இப்னு உம்மு மக்தூம் அவர்களைத் தம் பிரதிநிதியாக நியமித்தார்கள். முஸ்லிம்களின் படையில் இரு குதிரைகளும், நூறு கவச உடை வீரர்களும் இருந்தார்கள்.

வழியில் யூதர்களின் ஒரு குழு முஸ்லிம்களுடன் இணைந்து போரில் கலந்து கொள்வதற்காக வந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் காஃபிர்களுக்கு எதிராக யூதர்களிடமிருந்து உதவி பெறுவதை மறுத்தவாறு போரில் அவர்கள் கலந்து கொள்ள வேண்டாம் என்று தடுத்து விட்டார்கள். அதேபோன்று **15** வயதுக்குட்பட்ட சிறுவர்களையும் போரில் கலந்து கொள்வதிலிருந்து தடுத்தவாறு அவர்களையும் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

இஸ்லாமிய படை இரவு முகாமிட்டு தங்கிய போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களின் தலைமையில் **50** படை வீரர்களை நியமித்தார்கள். அவர்கள் இரவு முழுவதும் இஸ்லாமிய படையை சுற்றிலும் காவல் காத்தனர்.

அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் என்பவன் முதலில் (படையுடன்) சேர்ந்து வந்தான். ஆனால், வழியில் திரும்பிச் சென்று விட்டான். அதைப்பற்றிய விபரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; சஹ்ரி நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஷை(க்)கேன் எனும் இடத்திலிருந்து புறப்பட்டார்கள். மதீனாவுக்கும் உஹுதுக்கும் இடையில் ஷவ்த் என்னும் இடத்தை அடைந்தபோது தொழுகைக்கான நேரமாக ஆகியிருந்தது. அங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் தொழவைத்தார்கள். ஷவ்த் என்பது ஃகினா பள்ளத்தாக்கிற்கும் மதீனாவுக்கும் இடையில் உள்ள ஓர் இடமாகும். இந்த இடத்தில் அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் தன் கூட்டாளிகளான முனாஃபிக்களை அழைத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களை விட்டுவிட்டு திரும்பிச் சென்று விட்டான். அப்துல்லாஹ் பின் உபை திரும்பிச் செல்லும்போது பெருமானார் (ஸல்) அவர்களிடம், நீங்கள் என் பேச்சை ஏற்றுக் கொள்ளாமல் சிறுவர்களின் பேச்சை ஏற்றுக் கொண்டீர்கள். நாங்கள் எதற்காக எங்கள் உயிரைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டவாறு சென்றான். அப்துல்லாஹ் பின் உபையுடன் முனாஃபிக்கள் திரும்பிச் சென்ற பிறகு பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்த சஹாபிகளின் எண்ணிக்கை **700** ஆக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் அன்சார் பெருமக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, மதீனாவில் இருக்கும் யூதர்களில் நம்முடைய நண்பர்களாகவும், உதவி செய்பவர்களாகவும் இருப்பவர்களிடத்தில் நாம் ஏன் உதவி ஒத்தாசை பெறக்கூடாது என்று கேட்டார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களோ நமக்கு அவர்களின் உதவி தேவை இல்லை என்று கூறி விட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழுகைக்குப் பிறகு சஹாபிகளின் முன் விளக்கமாக சொற்பொழிவாற்றினார்கள். மார்க்கத்தின்படி எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைப் பற்றி முஸ்லிம்களுக்கு முழுமையான செயல் திட்டத்தை எடுத்துக் கூறினார்கள். இந்தப் போரில் குரைஷியர்களுடன் பனீ தஹாமா மற்றும் பனூ கினானா ஆகிய கோத்திரங்களும் கலந்து

கொண்டிருந்தன. இவ்வாறு காபிர்களுடைய படையினரின் எண்ணிக்கை மூவாயிரத்தை எட்டியிருந்தது. காஃபிர்களின் முழு படையும் ஆயுதம் எந்தியிருந்தது.

*இந்தப் போரைப்பற்றிய குறிப்பு இனி வரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும் என்று கூறிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

பாலஸ்தீனர்களுக்காக துஆ செய்யுமாறு நான் கூறி வருகிறேன்; அவர்களுக்காக துஆ செய்து வாருங்கள். கடந்த நாட்களில் போர் நிறுத்தம் செய்யப்பட்ட பிறகு என்ன நடக்கும் என்று கருதப்பட்டதோ அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது இஸ்ரேல் அரசு முன்பை விடவும் கடுமையாக காஸாவின் ஒவ்வொரு பகுதியிலும் குண்டுகளை வீசி வருகிறது; தாக்குதல் நடத்தி வருகிறது. அப்பாவி குழந்தைகளும் குடிமக்களும் ஷஹீதாகிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்த செயலுக்கெதிராக அமெரிக்காவினுடைய ஒரு காங்கிரஸ் பிரதிநிதியும் கூட பேசும் போது - அநேகமாக அவர் யூதர் என்று நினைக்கிறேன் - 'இப்பொழுது மிக அதிகமாகி விட்டது! இதைத் தடுப்பதற்கு அமெரிக்கா தன் பங்களிப்பை வழங்க வேண்டும்' என்று பேசி இருக்கிறார். வடகிழக்கு பகுதியில் ஒரேயடியாக நடத்தப்படும் இந்த ஃபயரிங் நிறுத்தப்பட வேண்டும் என்றும், குண்டு வீசுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் பதுங்கிய குரலில் அமெரிக்க அதிபரும் இப்பொழுது பேசியிருக்கிறார். வடக்கு பகுதிக்கு செல்லுங்கள்; அங்கு ஒன்றும் ஆகாது என்று முன்பு கூறி வந்தனர். இப்பொழுது அங்கேயும் இதே நிலைதான் காணப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் அமெரிக்க அதிபருடைய இக்கூற்று ஏதேனும் மனிதாபிமான அடிப்படையின் காரணமாக கூறப்பட்டது என்ற எவ்வித தப்பெண்ணத்திலும் நாம் இருந்து விடக் கூடாது! மாறாக இது அவர்களுடைய சொந்த இலாபத்திற்காக கூறப்பட்டதாகும். அமெரிக்காவில் தேர்தல் நடைபெற உள்ளது. போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அங்குள்ள இளைஞர்களும் இதற்கு எதிர் நடவடிக்கை காட்டுகிறார்கள். அதேபோன்று அமெரிக்காவில் குடியிருக்கக்கூடிய முஸ்லிம்களும் குரல் எழுப்பி இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் வாக்கு சேகரிப்பதற்காக அனைத்தையும் செய்கிறார்கள். பாலஸ்தீனர்கள் மீதோ முஸ்லிம்கள் மீதோ அவர்களுக்கு எவ்வித அனுதாபமும் கிடையாது.

முஸ்லிம் நாடுகளைப் பார்க்கும்போது அவர்களின் குரலில் ஓரளவுக்கு அழுத்தம் உருவாகி வருகிறது. ஆனால், ஒன்றாக ஆகி, போர் நிறுத்தத்திற்காக முயற்சி செய்யாத வரையில் எந்தப் பயனும் ஏற்படாது. அல்லாஹ் முஸ்லிம்களிடத்திலும் ஒற்றுமையை உருவாக்குவானாக!

முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமை இல்லை என்பதும், ஒரு முஸ்லிமே இன்னொரு முஸ்லிமைக் கொல்வதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறார் என்பதும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் தெரியும். ஏமனில் என்னதான் நடக்கவில்லை! இதேபோன்று மற்ற நாடுகளையும் பாருங்கள்! ஆயிரக்கணக்கான குழந்தைகளும் அப்பாவிகளும் முஸ்லிம்களின் கைகளால் இறந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் கூறுவதென்றால் சில இடங்களில்

இலட்சக்கணக்கில் இறந்து கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயங்கள்தான் அந்நியர்களுக்குத் துணிவைக் கொடுக்கின்றன. முஸ்லிம்கள் மீது கொடுமை இழைத்தால் எந்தப் பிரச்சனையும் இல்லை; ஏனென்றால் இவர்கள் தம்மீதே அநீதி இழைக்கக் கூடியவர்கள் என்று அவர்களுக்குத் தெரியும். முஸ்லிம்களுக்குப் பிற முஸ்லிம்களுடைய உயிரைப் பற்றி அக்கறை இல்லை என்றால் எதிரிக்கு எவ்வாறு அக்கறை இருக்கும்? முஸ்லிம்கள் பிற முஸ்லிம்களைக் கொலை செய்வதைக் குறித்து திருக்குர்ஆனில் அல்லாஹ் மிகக் கடுமையாக எச்சரித்துள்ளான். அவர்கள் நரகவாசிகளாக ஆகி விடுவார்கள் என்று அந்த எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் ஒன்றுபட்டு உலகிலிருந்து அநீதியை அகற்றக் கூடியவர்களாக ஆவார்களாக! அநீதியை அதிகரிக்கக் கூடியவர்களாக ஆகாமல் இருப்பார்களாக!

UNO -வும் தன் குரலை உயர்த்துவதற்கு முயற்சி செய்துள்ளது. ஆனால் அவர்களின் குரலை யார் கேட்கிறார்கள்! நாங்கள் இது செய்வோம்; நாங்கள் அது செய்வோம் என்று கூறத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. அவர்களுடைய பேச்சைக் கேட்பதற்குக் கூட யாரும் இல்லை. வல்லரசுகள் தம் உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு விடுகின்றன. அல்லாஹ் முஸ்லிம்கள் மீது கருணை புரிவானாக! எவ்வாறிருப்பினும், இந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும் நாம் துஆக்களுடன், நம் நட்பு வட்டத்திலுள்ள மக்களுக்கும், நம் பகுதிகளில் உள்ள அரசியல்வாதிகளுக்கும் இது தொடர்பாக குரல் எழுப்புவதற்குத் தொடர்ச்சியாக கவனமூட்டி வரவேண்டும். இதைப் பற்றி முன்னரும் கூட நான் ஜமாஅத்துகளின் மூலமாக தூதுச் செய்தி அனுப்பி இருந்தேன். இந்த அநீதியை முடிவுக்குக் கொண்டு வர நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று தம் நட்பு வட்டாரத்திலும் இவ்விஷயத்தை நாம் பரப்ப வேண்டும். அப்பாவிகளை அல்லாஹ் கொடுமையிலிருந்து காப்பாற்றுவானாக!

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரண்டு மர்ஹூம்களைப் பற்றி எடுத்துரைத்தார்கள். ஹாலந்தில் முரப்பியாக தொண்டாற்றிய மதிப்பிற்குரிய அப்துல் ஹக்கீம் அக்மல் சாஹிப் மர்ஹூம் அவர்களின் மனைவியாகிய மதிப்பிற்குரிய மஸ்வூதா பேகம் அக்மல் சாஹிபா அவர்களைப் பற்றியும், வாழ்வை அர்ப்பணித்திருந்தவரும் ரப்வாவின் தஃலீமுல் இஸ்லாம் உயர் நிலைப்பள்ளியின் ஆசிரியராக பணியாற்றியவருமான மாஸ்டர் அப்துல் மஜீத் சாஹிப் அவர்களைப் பற்றியும் எடுத்துரைத்தவாறு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவித்தார்கள். அத்துடன், மர்ஹூம்களின் பாவ மன்னிப்பு மற்றும் உயர் அந்தஸ்துக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**